# புலம்பல்

அறிமுகம்.

இதன் எழுத்தாளர் யார் என்பது தெரியாமல் இருந்த போதிலும், பாரம்பரியம் எரேமியாதான் இதனை எழுதினார் என்று கூறுகின்றது. இதன் எழுத்தாளரான தீர்க்கதரிசியே எருசலேம் வீழ்ந்ததைக்கண்ட சாட்சியாக இருக்கின்றார். அத்துடன் தன்னுடைய ஜெபத்தில் தன்னுடைய உணர்ச்சிகளைக் கர்த்தரிடம் கெட்டிவிட்டார். இந்த புத்தகம் கி.மு 589 இற்கும், எழுபது வருடத்திற்குப்பின்பு மீண்டும் கட்டப்பட்ட போது எழுதப்பட்டதாகும்.

**கருப் பொருள்**.

எருசலேமின் வீழ்ச்சியைக் கண்டபோது எழுத்தாளரான எரேமியா புலம்பினார். இந்த பேராபத் தான இடர்கள் பொருத்தமானதாக இருந்த போதிலும், அவர் மீள்நிலைப் படுத்தும்படி கர்த்தரி டத்தில் கிருபையைக்காக வேண்டிக் கொண்டார். இந்த புத்தகம் ஐந்து பாடல்களைக் கொண்டு ள்ளது, அதிகாரங்களோடு தொடர்புபட்டதாக இருக்கின்றது. மத்தியில் உள்ள பாடலானது அறுபத்தாறு வார்த்தைகளைக் கொண்டுள்ளது. அதேநேரம் மற்றவைகள் இருபத்தியிரண்டு வசனங்களைக் கொண்டுள்ளது. எல்லாப் பாடல்களும் தொடர்கள் ஒரு பாடலின் கடைசி எழுத்து அடுத்த பாடலின் முதலெழுத்தாக வரும். இது எபிரேய பாடலின் அகரவரிசையில் வருகின்றது.

**இறையியல் நோக்கம்.**

நாடுகடத்தப்படுவதற்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளின் சத்தியத்தை எரேமியா ஏற்றுக் கொள்கிறார். யூதாவின் பாவமே எருசலேமின் துயரத்திற்கும் ஆலயத்தின் அழிவிற்கும் வழிநடத்தி யுள்ளது, இந்த துயரங்களின் மத்தியிலும் எழுத்தாளர் கர்த்தருடைய உண்மையையும் இரக்கத்தையும் ஏற்றுக் கொள்கிறார், இவர்களை அழித்தவர்கள்மேல் கர்த்தர் நியாயம் செய்வார் என்றும், கர்த்தருடைய கிருபையைக் காண்பித்து எருசலேமை மீள்நிலைப்படுத்துவார் என்றும் காத்திருந்தான்.

1. இந்த புத்தகம் ஐந்து புலம்பல் புத்தகங்களாக எழுதப்பட்டுள்ளன. இவை யாவும் பாபிலோனியர்களால் எருசலேம் அழிக்கப்பட்ட துக்கத்தைக் குறித்து புலம்புகின்றன.

2. இது 119ம் சங்கீதம் போல அகரவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

a. வித்தியாசமான எபிரேய அகரவரிசை எழுத்துக்கள், அதிகாரம் 1,2 இன் இருபத்தியிரண்டு வசனங்களும் ஒவ்வொரு அகரவரிசையின் மறைப்படி எழுதப்பட்டுள்ளன

b. அதிகாரம் 3இல் அறுபத்தாறு வசனங்கள் உண்டு, அவை இருபத்தியிரண்டு பகுதிகளாக மூன்று வசனங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகள் யாவும் வித்தியாசமான எழுத்துக்களில் தொடங்குகின்றன.

3. கர்த்தர் மரித்த கொல் கொதா என்ற இடத்தில் உள்ள இடத்தில் எருசலேமின் வடபகுதியில் எரேமியா இருந்து புலம்பினார் என்று வழமையாளர்கள் குறுகின்றார்கள்.

4. இந்தப்புத்தகம் கண்ணீரும் துக்கமும் நிறைந்ததாகும். இது வேதனையின் நன்றிப்பாடலாகவும், இரக்கத்தின் கவிதையாகவும்,சோகம் நிறைந்த நீதி மொழியாகவும், இதயவேதனையின் பாடலாகவும், துக்கத்தின் சங்கீதமாகவும், துக்கத்தின் இசைப்பாடலாகவும் .....வேதாகமத்தில் காணப்படும் அழும் சுவராகவும் இருக்கின்றது. ” (*Briefing the Bible,* p. 232)

I. **கர்த்தருக்கு எதிராக தீமை செய்யத் தூண்டுதல். (புல. 1).** ஏறக்குறைய கி.மு. 1000ம் ஆண்டில் தாவீது ராஜா தன்னுடைய தலைநகரத்தை எருசலேமில் ஆரம்பித்தார். (2. 6.) அந்த நேசிக்கப்படும் நகரத்தை கர்த்தர் 400 வருடங்கள் அசீர்வதித்தார் . அசீரியர்களால் கி.மு 721இல் வடக்கு வலயத்து மக்கள் சிறைப்பிடக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டார்கள். ஆனால் எருசலேம் மேலும் 115 வருடங்களுக்கு பிரிக்கப்பட்டிருந்தது. எல்லா இந்த இரக்கமும், நீடிய துக்கமும் வீனாகப் போய்விட்டது, யூதா தேசம் கர்த்தரை தொடர்ந்தும், பரிசுத்தருக்கு தீமை செய்து கொண்டேயிருந்தது பாவம் செய்து கொண்டிருந்தது.தற்போது முடிவிற்கு வந்துள்ளது.

குறிப்பு;- குற்றச்சாட்டும் வசனங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.
A. 1:1: “ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே! ஜாதிகளில் பெரியவளும், சீமைகளில் நாயகியுமாயிருந்தவள் கப்பங்கட்டுகிற வளானாளே! ”
எரேமியாவை மக்களும் மன்னர்களும் வெறுத்த பொழுதும் அவர்களை நேசித்தார் தான் சொன்ன பேச்சை கேட்டிருந்தால் இப்படி சிறைப்பட்டு போக வேண்டிய அவசியம் இல்லை என்று புலம்பினார்.

B. 1:3: “யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமைவேலைசெய்யவும் சிறைப்பட்டுப்போனார்கள். அவள் புறஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள், இளைப்பாறுதல் அடையாள்; அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்துபிடித்தார்கள். ”

C. 1:8: “எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ்செய்தாள்; ஆதலால் தூரஸ்திரீயைப்போலானாள்; அவளைக் கனம்பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள்; அவளுடைய மானத்தைக் கண்டார்கள்; அவளும் பெருமூச்சுவிட்டுப் பின்னிட்டுத் திரும்பினாள். Jerusalem ha”

D. 1:9: “அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது; தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள்; ஆகையால் அதிசயமாய்த் தாழ்த்தப்பட்டுப்போனாள்; தேற்றுவார் இல்லை; கர்த்தாவே, என் சிறுமையைப் பாரும்; பகைஞன் பெருமைபாராட்டினானே.”

E. 1:17: “சீயோன் தன் கைகளை விரிக்கிறாள்; அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை; கர்த்தர் யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவனுக்குச் சத்துருக்களாகக் கட்டளையிட்டார்; அவர்களுக்குள்ளே எருசலேம் தூர ஸ்திரீக்கு ஒப்பானாள். ”

1:19 குழந்தைகளும் வாலிபரும் ஆண்களும் பெண்களும் முதியோரும் தேவாலய ஊழியரும் பட்டினியால் மாண்டனர். மனந்திரும்பா விட்டால் அழிவுதான்.

**II. கர்த்தரிடம் இருந்து வந்த தண்டனை (புல. 2).**

யூதர்கள் அடைந்த தண்டனையை 11-22 வரை எழுதப்பட்டுள்ளது.

A. யூதாவிலிருந்த ஒவ்வொரு வீட்டையும் அவர் உடைத்துவிட்டார். (2:2).

B. ஒவ்வொரு கோட்டையும் அரண்களும் உடைக்கப்பட்டன. (2:2).

C. சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே தம்முடைய உக்கிரத்தை அக்கினியைப்போல் சொரியப்பண்ணினார். (2:4).

D. தோட்டத்தின் வேலியைப்போல இருந்த தம்முடைய வேலியைப் பலவந்தமாய்ப் பிடுங்கிப்போட்டார்; சபைகூடுகிற தம்முடைய ஸ்தலங்களை அழித்தார்; (2:6).

E. யூதாவின் எதிரிகளுக்கு அதன் நாட்டுமக்களை அழிப்பதற்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. (2:16).

F. இளைஞனும் முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் தரையிலே கிடக்கிறார்கள்; என் கன்னிகைகளும் என் வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்கள்; உமது கோபத்தின் நாளிலே வெட்டி, அவர்களைத் தப்பவிடாமல் கொன்றுபோட்டீர். (2:21).

**III. கர்த்தருடைய தீர்க்கதரிசி. (புல3).** எருசலேமுடைய அழிவைப் பார்த்தும், ஜனங்களின் துயரங்களைக் கண்டும் எரேமியாவின் கண்ணீர் மழையைப் போல சொரிந்தது,

A. தீர்க்கதரிசியின் துக்கம். இந்த புலம்பலுக்கூடாக எரேமியா தன்னுடைய ஆத்துமாவின் அங்கலாய்ப்பை எங்களுடன் பகிர்ந்து கொள்ளிறார். அதனை கீழே காணப்படும் வசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன.

1. 1:12: “வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள். .”
2. 1:16: “இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்; என் கண், என் கண்ணே நீராய்ச் சொரிகிறது; என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்; பகைஞன் மேற்கொண்டதினால் என் பிள்ளைகள் பாழாய்ப்போனார்கள். ”

3. 2:11: “என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலினிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது; என் குடல்கள் கொதிக்கிறது; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது; குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கிறார்கள். .”

4. 3:1-19: பாபிலோனியர்களின் முற்றுகைக்கு முன்பும், எரேமியா நாட்டு மக்களின்கையினால் பல துக்கத்தைச்சுமந்துள்ளார். (3:52-66.)

**B. தீர்க்கதரிசியின் உறுதி மொழி. .** சூறாவெளியின் மத்தியிலும் ஒரு நம்பிக்கையின் ஒளக்கீற்றுத் தென்படும். “இதை என் மனதிலே வைத்து, நம்பிக்கை கொண்டிருப்பேன். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில் லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்த ருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்கக்கடவன். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். அவர் சஞ்சலப்படுத் தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை. ” (3:21, 22, 23, 24, 25, 26, 27, 31, 32, 33).

**C. தீர்க்கதரிசியின் அறிவுரை. (3:40, 41).** “நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத் தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம். ”

**IV. கர்த்தருடைய ஜனங்கள். (புல 4).**

A. குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது; பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை. (4:4).

B. ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே. (4:2). 5:13.

C. ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் வீதிகளில் பாழாய்க்கிடக்கிறார்கள்; இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக் கொள்ளுகிறார்கள். (4:5).

D. அவளுடைய நசரேயர் உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப்பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப்பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப்பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் தோல் அவர்கள் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு, காய்ந்த மரத்துக்கு ஒப்பாயிற்று. (4:7, 8).5:12.

E. இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன, என் ஜனமாகிய குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின. (4:10).

F. பொய்த்தீர்க்கதரிசிகள் குருடர்போல வீதிகளில் அலைந்து, ஒருவரும் அவர்கள் வஸ்திரங்களைத் தொடக்கூடாதபடி இரத்தத்தால் கறைப்பட்டிருந்தார்கள். (4:14).

G. செதேக்கியா அரசன் சிறைப்பிடக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டான். (4:20).

**V. கர்த்தரிடத்தில் ஜெபம் செய்தல். (புல. 5).** எரேமியாவின்ஜெபம் நான்னு விடயங்களைக் கொண்டுள்ளது. :

A. நினைத்தருளும். “கர்த்தாவே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும்; எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும். ” (5:1).

B. மனம்திரும்புதல் “எங்கள் தலையிலிருந்து கிரீடம் விழுந்தது; ஐயோ! நாங்கள்

பாவஞ்செய்தோம் ” (5:16).
C. **அங்கீகாரம்** “கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும். ” (5:19).
D. **புதியவைகளாக்கும்** “கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்; பூர்வகாலத்திலிருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும். ” (5:21).

நன்றி கர்த்தாவே
திராணி
உசாத்துணை நூல்கள்

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS**, **INC**. **Wheaton**, **Illinois**

**HOLMAN**
**BIBLE**
**HANDBOOK** *General Editor* **David S. Dockery** *Editorial Team* **Trent C. Butler**
**Christopher L. Church**
**Linda L. Scott**
**Marsha A. Ellis Smith**
**James Emery White HOLMAN BIBLE PUBLISHERS Nashville, Tennessee**